# திருவள்ளூர் நகராட்சி

## அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

2020 ஆண்டு ஜீன் 05–ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 11.00 மணிக்கு திருவள்ளூர் நகராட்சியின் மன்றக் கூட்டம் நகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் திரு.ப.சந்தானம், பி.காம். அவர்களின் தலைமையில் மன்றக் கூடத்தில் நடைபெற்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.

### நகர் மன்ற அவசரக் கூட்ட நடவடிக்கைகள்

**பொருள் எண்.1**

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தமிழ்நாடு நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் 2020–21 – ன் கீழ் ரூ.503.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ் காணும் தார் சாலைகளை புதுப்பித்தல் பணி மேற்கொள்ள உரிய பிரேரனையை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் வழியாக அனுப்ப மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | சாலையின் நீளம் (கிலோ மீட்டர்) | மதிப்பீட்டு தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | **சிப்பம்–1**<br>திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட தந்தைபெரியார் சாலை, காமராஜபுரம் சாலை, செம்பருத்தி சாலை, காமாட்சி நகர் சாலை, வீரா நகர் சாலை, கவிகாளமேகம் தெரு, சோழன் தெரு, ஜெயா நகர் சாலை, திருமலை மெயின் ரோடு ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல். | 4.070 | 211.00 |
| 2 | **சிப்பம்–2**<br>திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட NGO காலனி மெயின் ரோடு, NGOகாலனி (விவசாய அலுவலகம்) சாலை, வள்ளலார் தெரு, குட்டைகரை தெரு, சித்திவிநாயகர் கோயில் தெரு, தலக்கஞ்சேரி மெயின் ரோடு, V.M மெயின் ரோடு இணைப்பு IOB Colony, சக்தி கோயில் தெரு, ஆகிய பகுதிகளில் தார் சாலை புதுப்பித்தல். | 3.600 | 219.00 |
| 3 | **சிப்பம்–3**<br>திருவள்ளூர் நகராட்சிக்குட்பட்ட IRN மெயின் ரோடு, ஜெயின் நகர் மெயின் ரோடு, செந்தில் நகர் சாலை, ஆகிய இடங்களில் தார் சாலை புதுப்பித்தல். | 1.300 | 73.00 |
| | **மொத்தம்** | **8.970** | **503.00** |

**அலுவலக குறிப்பு:-**

1. நிர்வாக அனுமதி மற்றும் நிதி ஒதுக்கீடு வேண்டி பிரேரனை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு அனுப்ப மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 1018/2020/இ1)

**தீர்மான எண்:–1011 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

# <u>திருவள்ளூர் நகராட்சி</u>
## <u>சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்</u>

திருத்திய 1920ம் வருடத்திய தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை III விதி 2(1)ன் கீழ் திருவள்ளூர் நகர் மன்றத்தின் சாதாரணக் கூட்டம் திருவள்ளூர் நகர் மன்ற கூடத்தில் 30.06.2020 –ம் தேதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற உள்ளது. மேற்படி கூட்டத்தில் கீழ்கண்ட பொருட்கள் பரிசீலனைக்கு வைக்கப்பட முடிவு செய்யப்பட்டது.

<u>நகர் மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்</u>

**<u>பொருள் எண்:1</u>**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் ஜுன் 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–1012 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:2

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜுன் 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–1013 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:3

இந்நகராட்சி துப்புரவு அலுவலர் அவர்களின் ஜுன் 2020–ம் மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** பதிவு செய்யலாம்

**தீர்மான எண்:–1014 பதிவு செய்யப்பட்டது.**

பொருள் எண்:4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நிகழும் பிறப்பு இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகளின் விபரங்கள் கணினியில் பதியப்படுகிறது. மே 2020–ம் மாதத்தில் கீழ்கண்டவாறு பிறப்பு, இறப்பு மற்றும் இறந்து பிறந்தவைகள் விபரங்கள் கணினியில் பதியப்பட்டு உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| மே 2020 | 3 | 7 | 10 | 7 | 3 | 10 | – | – | – |

**<u>அலுவலக குறிப்பு:</u>**

1. மன்றம் பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்:–1015 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்:5**

இந்நகராட்சியில் இயங்கிவரும் பெரியகுப்பம் பேருந்து நிலையம் மற்றும் அரசு மருத்துவமனை வளாகத்தில் அமைந்துள்ள அம்மா உணவகங்களில் உள்ள எரிவாயு அடுப்புகள் பழுது அடைந்ததால் அதனை ஸ்ரீ வீரராகவா கேஸ் ஏஜென்சி நிறுவனம் மூலம் மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும் பழுது நீக்கம் செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அதற்கான பட்டியல் தொகை ரூ.5600/—ஐ ஸ்ரீ வீரராகவா கேஸ் ஏஜென்சிக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.3344/2016/அ1)

**தீர்மான எண்:—1016 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:6**

திருவள்ளூர் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு கோவிட் — 19 உலகளாவிய பெருந்தொற்று காரணமாக, திருவள்ளூர் மாவட்டத்தில் தினசரி கோவிட் 19 கொரோனா வைரஸ் நோய் தொற்று அதிகமாக பரவி வருவதால் நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் (Monitoring Officer) மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தியவாறு கொரோன வைரஸ் நோய் தொற்று உள்ளவர்களுக்கு சிகிச்சை மேற்கொள்ள திருவள்ளூரிலுள்ள டாக்டர். அம்பேத்கர் சட்ட கல்லூரியில் COVID-Care Centre –ல் அனைத்து சிகிச்சையும் அளிக்கப்பட்டு வருகிறது. மேற்படி சட்ட கல்லூரியில் துப்புரவு பணிகள் மேற்கொள்ள தினசரி மூன்று வேளைகளில் சுழற்சி முறையில் (3 Shifts) மொத்தம் 21 பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் அவர்களால் நிர்ணயம் செய்யப்படும் ஊதியம் நாள் ஒன்றிக்கு என்கின்ற அடிப்படையில் பணியாளர்களை பணி அமர்த்தி பணியாற்றிட ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.28,50,000/— யினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—**

அ) மன்றம் அனுமதிக்கலாம், பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) மேற்படி செலவினம் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பிரேரணை அனுப்பலாம்.
(ந.க.எண்.644/2020/எச்1)

**தீர்மான எண்:—1017 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:7**

துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் திருவள்ளூர் அவர்களின் 23.06.2015—ம் நாளிட்ட கடித ந.க.எண்.3389/NRHM 2015—ல் இந்நகராட்சி பகுதியில் இயங்கி வரும் தாய் சேய் மையங்களில் ஒன்றான பெரியகுப்பம் நகர ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு துறையின் சார்பாக ஒரு மருத்துவ அலுவலரும், மூன்று செவிலியர்களும் நியமிக்கப்பட்டுள்ளதாலும் 24.04.2015 அன்று மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் அவர்களால் புதியதாக துவக்கப்பட்ட நேதாஜிசாலையில் கட்டப்பட்டுள்ள நகர் நல மையம் 24 மணி நேரமும் சேவை செய்திட செவிலியர் அவசியமாக உள்ளதாலும், தற்போது இத்துறையில் போதுமான செவிலியர்கள் இல்லாத காரணத்தினாலும் இந்நகராட்சியின் மூலம் மாவட்டம் ஆட்சியர் திருவள்ளூர் மாவட்டம் அவர்களால் நிர்ணயம் செய்துள்ள தினக்கூலி அடிப்படையில் இரண்டு பெண் செவிலியர் உதவியாளர்கள் டிசம்பர் 2015 முதல் நவம்பர் 2017 வரை பணிபுரிந்து வருகின்றனர். மேலும் இவ்விருபெண் செவிலியர் உதவியாளர்களுக்கு நகர் மன்ற அனுமதியுடன் (தீர்மான எண்.618, நாள்.28.02.2019) மார்ச் 2020 வரை பணி நீட்டிப்பு வழங்கப்பட்டது. தற்போது வரும் நிதியாண்டிற்கு ஏப்ரல் 2020 முதல் மார்ச் 2021 வரை இவ்விருபெண் செவிலியர் உதவியாளர்களுக்கும் பணி நீடிப்பு செய்யவும் அதற்குண்டான தோராய செலவு ரூ.3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதியும், மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>
மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண்.2886/2015/எச்1)

**தீர்மான எண்:—1018  மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

## பொருள் எண்:8

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்று ஏற்படாமிலிருக்க சுகாதாரபிரிவில் அவசர அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறிப்பிட்ட பொருட்களுக்கு விலைப்பட்டியல் கோரியதன் அடிப்படையில் HITECH GREEN INDIA , Mylapore , Chennai – 4, United Trading Co Kilpauk, Chennai – 10 மற்றும் Phoenix Global Ventures, Mylapore, Chennai – 4 நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றது அதன் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

<table>
<tr><th>வ. எண்</th><th>பொருட்கள் விவரம்</th><th>HITECH GREEN INDIA , Mylapore , Chennai – 4</th><th>United Trading Co Kilpauk, Chennai – 10</th><th>Phoenix Global Ventures, Mylapore, Chennai - 4</th><th>குறைந்த விலைப் புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>Infrared Thermo Meter</td><td>ரூ.2940</td><td>ரூ.2730</td><td>ரூ.2520</td><td rowspan="2">Phoenix Global Ventures, 1st Main Road, Mylapore, Chennai - 4</td></tr>
<tr><td>2</td><td>Fingertip Pulse Oximeter</td><td>ரூ.1940</td><td>ரூ.1730</td><td>ரூ.1520</td></tr>
</table>

குறைந்த விலைப்புள்ளி அளித்த Phoenix Global Ventures, 1st Main Road, Mylapore, Chennai -4 நிறுவனத்திற்கு தனி அலுவலரின் முன் அனுமதி பெற்றும், மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கியும் அவசர அவசியம் கருதியும் பணி உத்தரவு வழங்க தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும், அதற்கான செலவினத்திற்கும் மன்றம் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:—</u>

1. நிர்வாக நலன் கருதியும் அவசர அவசியம் கருதியும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனா வைரஸ் தொற்று நோய் அவசர கால பணி என்பதால் ஆணையர் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.644/2020/எச்1)

**தீர்மான எண்:—1019  மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

## பொருள் எண்:9

திருவள்ளூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் கொரோனா தொற்று ஏற்படாமலிருக்க சுகாதாரபிரிவில் அவசர அவசியம் கருதி முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குறிப்பிட்ட பொருட்களுக்கு விலைப்பட்டியல் கோரியதன் அடிப்படையில் Sri Balaji Marketing, Sri Vinayaga pharmacy நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றது அதன் ஒப்பு நோக்கு பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பொருட்கள் விவரம் | Sri Balaji Marketing | Sri Vinayaga pharmacy | குறைந்த விலைப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | Lemon Grass Oil | ரூ.2990/— | ரூ.3200/— | Sri Balaji Marketing |

குறைந்த விலைப்புள்ளி அளித்த Sri Balaji Marketing,9-5-1, Bazaar Street, Ayyampalayam, Dindigul, Tamil Nadu நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் ஒப்புதலுக்காக சமா்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. கொரோனா வைரஸ் தொற்று நோய் அவசர கால பணி என்பதால் ஆணையா் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதை அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.644/2020/எச்1)

**தீா்மான எண்:–1020 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள் எண்:10**

இந்நகராட்சி அலுவலகம், நீா் உந்து நிலையம் மற்றும் பாதாளச்சாக்கடை பணியில் பல்வேறு இடங்களில் இயங்கி வரும் மின் ஆக்கிகளில் (Genset ) ஏற்படும் பழுதுகளை தனியாா் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு முறையில் பழுது நீக்கம் செய்யும் பணி மேற்கொள்ளவும் அதற்கான மதிப்பீட்டுத் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கும் மற்றும் ஒப்பந்ததப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. மேற்படி செலவினத்தினை வரவு செலவு திட்டத்திலிருந்து பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 4541/ 2019/ இ2 )

**தீா்மான எண்:–1021 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது**

**பொருள் எண்:11**

இந்நகராட்சி சொந்தமான திரு.வி.க.பேருந்து நிலைய கடை எண். 5–ஐ, திரு.R,.ராஜகுமரன். எண்.5/38, ஏரிக்கரை திருவள்ளூா் என்பவருக்கு 01.10.2014 முதல் 30.09.2017 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை அனுபவிக்க உத்திரவு வழங்கப்பட்டது. குத்தகை காலம் நிறைவடைந்த நிலையில் அரசாணை எண்.92, நகராட்சி நிா்வாகம் மற்றும் குடிநீா் வழங்கல் துறை, நாள்.03.07.2007-ன்படி கடையினை தொடா்ந்து நடத்திட அனுமதி கோரப்பட்டதை தொடா்ந்து பழைய வாடகை தொகையில் 15% உயா்வு செய்யப்பட்டு இந்நகா்மன்ற தீா்மான எண்.208, நாள்.30.11.2017 அனுமதி வழங்கப்பட்டதை தொடா்ந்து திரு.R,.ராஜகுமரன். எண்.5/38, ஏரிக்கரை திருவள்ளூா் என்பவருக்கு 01.10.2017 முதல் 30.09.2020 வரை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு கடையினை தொடா்ந்து நடத்திட குத்தகை உரிமம் காலநீட்டிப்பு செய்து அனுமதி வழங்கப்பட்டது.

மேற்படி கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை மற்றும் சேவைவரி தொகைகளை செலுத்தக் கோரி பல அறிவிப்புகள் மற்றும் இறுதி அறிவிப்புகள் வழங்கப்பட்டு உத்திரவு காலநீட்டிப்பு செய்யப்பட்ட நாள் முதல் ஜீன் 2019 வரை வாடகை மற்றும் சேவைவரி தொகைகள் செலுத்தப்பட்டு கடையினை தொடா்ந்து நடத்திட இயலாத காரணத்தினால் கடையினை நகராட்சி வசம் ஒப்படைப்பதாகவும் நிலுவை வாடகையினை குத்தகை வைப்புத் தொகையில் ஈடு செய்யக் கோரப்பட்டதை ஏற்று குத்தகை உரிமம் இரத்து செய்யப்பட்டு அன்னாருடைய வைப்புத்தொகை நிலுவைத்தொகைக்கு ஈடு செய்யப்பட்டது.

எனவே திருவிக பேருந்து நிலைய கடை எண். 5–ஐ மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்.5463/2011/அ3)

**தீா்மான எண்:–1022 மன்ற அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்:12**

இந்நகராட்சி சொந்தமான பெரியகுப்பம் பேருந்து நிலையத்தில் உள்ள 10 பழைய கடைகளில் கடை எண். 7–ஐ, திருமதி.G,.ஷாஜிகுமாரி. எண்.13, கற்பகம் இல்லம், அய்யனார் அவென்யூ திருவள்ளூர் என்பவருக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்.316, நாள்.18.05.2018ன்படி 01.06.2018 முதல் 31.05.2021 வரை மூன்று ஆண்டுகளுக்கு குத்தகை அனுபவிக்க உத்திரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் கடையினை தொடர்ந்து நடத்த இயலாத நிலை உள்ளதாக தெரிவித்து கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை மற்றும் சேவைவரி தொகைகள் முழுமையாக செலுத்தப்பட்டு நகராட்சி வசம் 23.01.2020 அன்று கடை ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே பெரியகுப்பம் பேருந்து நிலையத்தில் உள்ள 10 பழைய கடைகளில் கடை எண். 7–ஐ மறு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண்.1732/2017/அ3)

**தீர்மான எண்:–1023 மன்ற அனுமதி வழங்கப்பட்டது**

**பொருள் எண்:13**

இந்நகராட்சிக்கு தேவையான எழுது பொருட்கள் மற்றும் இதர இனங்களை 2020–21–ம் ஆண்டிற்கு வாங்கும் பொருட்டு அதற்கான விலைப்புள்ளி கோரிடவும், அதற்குரிய உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு:–</u>**

1. நிர்வாக நலன் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினங்களை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்
   (ந.க.எண்.1933 / 2019/B3)

**தீர்மான எண்:–1024 மன்ற அனுமதி அளிக்கப்பட்டது.**

***************